தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் சென்னை
03 AUG 2023
19333

8

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தொழிலாளர் துறை – திரு.அ.தனசேகர் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(எம்.1)த் துறை

அரசாணை (3டி) எண்.12 நாள் 28.07.2023

சோபகிருது வருடம், ஆடி 12,
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணை எண்.ஜி3/347/2020, நாள் 19.01.2022.
3. தொழிலாளர் ஆணையரின் கடித எண். ஜி3/35153/2022, நாள் 04.02.2023.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் செயல்முறை ஆணையில், காலஞ்சென்ற திரு.சி.அப்புசாமி, சிறப்பு நிலை இரவு காவலர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம், மேட்டூர் என்பவரின் மகன் திரு.அ.தனசேகர் என்பவருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது என்றும், தனியர் 24.01.2022 அன்று முற்பகல் முதல் ஓசூர் தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகளின்படி இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார் என்றும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கான அனைத்து தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் தெரிவித்து, தனியரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 24.01.2022 அன்று முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தொழிலாளர் ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தொழிலாளர் ஆணையரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர் காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு.சி.அப்புசாமி, சிறப்பு நிலை இரவு காவலர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம், மேட்டூர் என்பவரின் மகன் திரு.அ.தனசேகர் என்பவரை, தொழிலாளர் துறையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இளநிலை உதவியாளர் பதவியில், அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடல்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், தனியர் பணியில் சேர்ந்த நாளான 24.01.2022 முற்பகல் முதல், பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு, ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற நடைமுறையில் உள்ள விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் மனித வள மேலாண்மைத் (ஜி) துறையின் அ.சா.எண்.4976316/ஜி2/2023, நாள் 24.07.2023–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

முகமது நசிமுத்தின்,
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

பெறுநர்
முதன்மைச்செயலாளர் / தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
✓இயக்குநர் (மு.சு.பொ.), தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை–600 032.
திரு.அ.தனசேகர், இளநிலை உதவியாளர்.
(தொழிலாளர் ஆணையர், சென்னை –6 வழியாக)

<u>நகல்:</u>
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (அநமு.2) துறை, சென்னை–600 009.
அரசுகூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
சுத்த நகல் கோப்பிற்கு (2342/எம்1/2023)
இருப்புக் கோப்பு / உதிரிநகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

28/7/2023
பிரிவு அலுவலர்